**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,**

**Present : Tmt.P. Subhashini B.A.,B.L.,**

Judicial Magistrate Court No.I,
Tiruchirappalli.

**CC 881/22**

Deposition of witness for Prosecution அ.சா. 2

| | |
|---|---|
| Name | : சதீஸ் |
| Father Name | : சிவலிங்கம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37/24 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 11.09.2024.

1,2 எதிரிகள் ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர் . 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கீழசிந்தாமணி ஓடத்துறையில் குடியிருந்து வருகிறேன். நான் சத்திரம் பேருந்து நிலையத்தில் தரைக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. ஆஜர் 1,2 எதிரிகளை தெரியாது . 3 வது எதிரி விஜய் என்பவரையும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் படி பரிசீலனைக்கு பிறகு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 20.11.2021 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் அ.சா.1 ம் வியாபார விசயமாக சிந்தாமணி பூசாரி தெருவில் உள்ள எங்களது நண்பரை பார்க்க சென்று கொண்டிருந்த போது ஆஜர் 1,2 எதிரிகள், 3 வது எதிரி விஜய் என்கிற பாண்டவிஜய் TN 81 D 1930 Hero Glamour என்ற சிவப்பு கலர் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தாகவும் கடந்த 1 1/2 வருடங்களாக நான் உங்களிடம் வாங்கும் லாட்டரி சீட்டுகளுக்கு பரிசுகள் ஏதும் விழுவதில்லை என்று கேட்டதாகவும் அதற்கு ஆஜர்

SMITHCRA

முதலாவது எதிரி நான் லாட்டரி சீட்டு வாங்கும் பொள்ளாச்சியை சேர்ந்த நபர் தற்போது போலிஸ் கெடுபிடி அதிகமாக இருப்பதால் லாட்டரி சீட்டுகள் கொஞ்சமாக தான் கொடுப்பதாகவும், உண்மையான லாட்டரி சீட்டுகளை எனக்கு தெரிந்த முக்கியமான நபர்களுக்கும் மட்டும் விற்பனை செய்வதாகவும் அதேபோல் என்னிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கி விற்கும் ஆஜர் 2 மற்றும் 3 வது எதிரி விஜய் என்கிற பாண்டவிஜய் விற்க சொன்னேன் என்றும், அதில் வரும் பணம் எங்களது செலவுக்கு போதாததால் நாங்கள் மூவரும் அதிக லாபம் கருதி உன்னை போல் எங்களிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கும் மற்ற சில வாடிக்கையாளர்களுக்கு போலியான லாட்டரி எண்களை வெள்ளை பேப்பரில் பிரிண்ட் செய்து அதை ஏமாற்றி விற்று சம்பாதித்து வருகிறோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல.

2. மேலும் போலிசார் விசாரணையில் ஆஜர் 1,2 எதிரிகளிடமும் மற்றும் 3 வது எதிரி விஜய் என்கிற பாண்டவிஜய் ஏன் என்னை இப்படி ஏமாற்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு அதற்கு அவர்கள் நாங்கள் அப்படி தான் செய்வோம் உன்னால் முடிந்ததை பார்த்து கொள் என்று சொல்லி இருசக்கர வாகனத்தில் சென்று விட்டதாகவும் இது சம்மந்தமாக கோட்டை காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுக்க செல்வதாக சொன்னதாகவும் சம்பவத்தை நேரடியாக பார்த்தாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

***Sd/ P. Subhashini B.A.,B.L.,***
Judicial Magistrate No.I,
Tiruchirappalli.